IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.671/2025

Deposition of Witness PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது BP அக்ரகாரம் பகுதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது ஈரோடு ஆ கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 12.07.2024 அன்று மாலை மணி4.30 அளவில் பன்னீர்செல்வம் பார்க் பகுதியில் ஒரு விபத்து ஏற்பட்டுள்ளதாக எனக்கு தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த போது 60 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபர் விபத்தில் அடிபட்டு மூக்கில் ரத்தம் வழிந்த நிலையில் சுயநினைவின்றி இருந்தார். பின்னிட்டு அங்கு இருந்த ஒருவர் மூலம் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்.

பின்னிட்டு விசாரித்ததில் யமஹா ஆல்பா என்ற வாகனத்தை ஓட்டி வந்த நபர் தான் விபத்தை ஏற்படுத்தியதாக தகவல் கிடைத்தது. பின்னிட்டு 22.07.2024 தேதி அன்று விபத்தில் அடிபட்ட நபர் இறந்து விட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. விபத்தில் அடிபட்டு இறந்து போன நபருக்கு

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.01.29 18:24:27 +0530

உரிமை கோரி யாரும் வராததால், நான் அன்றைய தினம் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இந்த புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **புகார் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கிராம நிர்வாக அலுவலராக 10 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்துள்ள அனுபவம் எனக்கு உண்டு என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் இருந்து விபத்து சம்பந்தமாக இன்டிமேசன் எனக்கு கொடுத்தார்களா என்றால் இல்லை. போலீசாரிடமிருந்து விபத்து சம்பந்தமாக எனக்கு எந்த இன்டிமேஷனும் வரவில்லை. நானும், எனது உதவியாளரும் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் புகார் மனு கொடுக்க காவல் நிலையம் சென்றோம். 12.07.2024 அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டேன்.

அங்கு நிலையத்தில் உதவி ஆய்வாளர், ஆய்வாளர் ஆகியோர் இருந்தார்கள் என்றால், உதவி ஆய்வாளர் இருந்தார். நான் கொடுத்த புகாரில் சாட்சியாக கிராம உதவியாளர் சாட்சி கையொப்பம் போட்டாரா என்றால் இல்லை. நான் மட்டும்தான் கையொப்பம் போட்டேன். அந்த புகாரில் நான் தேதி குறிப்பிடாமல் புகார் கொடுத்தேனா என்றால் தேதி குறிப்பிட்டு தான் புகார் கொடுத்தேன். வழக்கு சம்பவ இடத்தில் மாநகராட்சி,

S
RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.29 18:24:38 +0530

சிஎஸ்ஐ மருத்துவமனை, வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நடுவில் தடுப்புச் சுவர் உள்ளது என்றால் சரிதான். தடுப்புச் சுவரின் மேல் பெயர் பலகை உள்ளது என்றால் நான் கவனிக்கவில்லை. அந்த பகுதியில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த பகுதியில் CCTV கேமரா அரசாங்கமே பொருத்தி இருந்தது என்றும், நான் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் கூறியது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரி இல்லை.

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.29 18:24:52 +0530